JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 52 |
| NAME | : | கவிதா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 28.10.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் ஊர்க்காரர்கள். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும். அசா.2 அந்தோணிராஜ் தெரியாது. அசா.3 டேவிட் அமல்ராஜ் தெரியாது . அசா.4 செல்வராஜ் அசா.5 ஜோசப்ராஜ் அசா.6 அருமைகிளி . அசா.7 பாலமுருகன் . அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி ஆகியோரை தெரியாது. அசா.12 பொன்பாண்டி தெரியாது அசா.13 சாந்தி தெரியாது அசா.14 குணசீலன் தெரியும், அசா.15 முத்துலெட்சுமி தெரியாது, அசா.16 செல்வகுமாரி ஆகியோர்களை தெரியாது அசா.17 முருகன் அசா.18 ராமர் மனைவி சரோஜா ஆகியோர்களை தெரியாது அசா.19 குமரேசன் அசா.20 மணிராஜ் தெரியாது அசா.21 பொன் சேகர் தெரியாது . அசா.22 சுதா தெரியாது, அசா.23 ரவிகுமார் தெரியாது அசா.24 ஜெயஜோதி தெரியாது, அசா.25 ஜானகி ஆகியோரை தெரியாது. அசா.26 பவளக்கொடி தெரியாது, அசா.27 தெய்வகனி தெரியும், அசா.28 செல்வன் தெரியாது, அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியாது அசா.30 அருள்ஜெலஸ்டீன் தெரியாது, அசா.31 அன்னபூரணி தெரியாது, அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் அசா.33 முத்துக்கனியை தெரியாது , அசா.34 வசுமதி தெரியாது, அசா.35 இருளப்பன் தெரியாது, அசா.36 முருகன் தெரியாது, அசா.37 கெலின் ஞானபிரகாசம் தெரியாது, அசா.38 மரியசுந்தரி ஆகியோர்களை தெரியாது அசா.39 தேன் மொழி அசா.40 புஷ்பவள்ளி அசா.41 விஜய், அசா.42 சரோஜா ஆகியோரை தெரியாது. அசா.43 பாலமுருகன் அசா.44 காளீஸ்வரி ஆகியோர்களை தெரியாது. அசா.45 கனகமணி, அசா.46 சகுந்தலா தெரியாது, அசா.47 ஞானப்பிரகாசம் தெரியாது ,. அ.சா.48 சேர்மக்கனியை தெரியாது,

அ.சா.49 மூக்கம்மாள் அசா.50 முருகன் தெரியாது. அசா.51 ஐயப்பன் தெரியும். ஆஜர் எதிரிகள் 2009ம் வருடத்திலிருந்து சீட்டு பிரித்தார்கள். எத்தனை குழுக்களாக சீட்டு பிரித்தார்கள் என்றால் 7 குழுக்களாக சீட்டு பிரித்தார்கள். நான் ரூ.60000 சீட்டில் ஒரு சீட்டு போட்டிருந்தேன். 38 வாரம் கட்டி இருந்தேன். ரூ.11740 கட்டி இருந்தேன். சீட்டு பணத்தை மாயவன் கோவிலில் ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு கட்டுவேன். நான் சீட்டு பணத்தை கட்டும் போது எதிரிகள் நோட்டில் வரவு வைத்து கொள்வார்கள். சீட்டு பணம் பின்னர் பிரிக்கவில்லை. ஊரை விட்டு போனதால் சீட்டு பணத்தை பிரிக்கவில்லை. பின்னர் 9 மாதம் கழித்து வந்தார்கள். கிருஷ்ணன் என்பவர் புகார் கொடுத்தார். வரவு வைத்த நோட்டுகளை எரித்து விட்டார்கள். எப்போது பிரிப்பார்கள் என்று நான் அவர்களிடம் சீட்டு போட்டிருந்தேன். தற்போது வரை நான் கட்டிய பணத்தை தரவில்லை. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரை நான் படித்து பார்க்கவில்லை. புகாரில் என்ன விவரம் எழுத பட்டிருந்தது என்றால் தெரியாது. புகாரை எப்போது கொடுத்தார்கள் என்றால் சீட்டு பிரிக்கவில்லை என்பதால் கொடுத்தோம். புகார் கொடுக்க நான் காவல்நிலையம் சென்ற போது விசாரித்தார்கள். நாங்கள் கொடுக்கும் பணத்தை வரவு வைக்கும் நோட்டை எரித்து விட்டதாக சொன்ன விவரம் யார் சொன்னார் என்றால் சீட்டு பிரித்தவர்கள் தான் சொன்னார்கள். நான் எவ்வுளவு சீட்டு எத்தனை மாதம் செலுத்தினேன் என்ற விவரத்தை புகார் கொடுத்தவரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். போலிஸ் விசாரணையில் சீட்டு எத்தனை மாதம் எவ்வுளவு கட்டினேன் என கொடுத்தேன் என்றால் சரிதான். போலிஸார் விசாரிக்கும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் ஞாபகம் இல்லை. என்னை ஆண் போலிஸ் விசாரித்தார். மாயவன் கோவில் நிர்வாகம் செய்வதற்கு இரண்டு தரப்பினரிடையே பிரச்சினை இருந்தது என்றால் சரிதான். நான் இதற்கு முன்பாக மாயவன் கோவிலில் சீட்டு பிரிப்பவர்களிடம் சீட்டு போட்டிருக்கேனா என்றால் சீட்டு போட்டிருக்கிறேன். இதற்கு முன்னால் இந்த கோயிலில் சீட்டு பிரித்தவர்கள் தான் தொடர்ந்து சீட்டு பிரிப்பார் என்றால் சரிதான். எதிரிகளில் ஒருவர் பெயர் மாயகிருஷ்ணன், மற்றொருவர் பெயர் மாயநாதன். புகார் கொடுப்பதற்கு யார் என்னை அழைத்து சென்றார் என்றால் நானாக தான் சென்றேன். சுமாராக 50 பேர் புகார் கொடுக்கும் போது காவல்நிலையத்தில் இருந்திருப்போம்.

புகாரில் யாரெல்லாம் கையெழுத்து போட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் கிருஷ்ணன் கையெழுத்து போட்டுள்ளார். மகேஷ் மாயவன் அன்றையதினம் அங்கு வந்திருந்தார் என்றால் தெரியாது. ரூ.30000 சீட்டில் மொத்தம் எத்தனை உறுப்பினர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகள் எவ்வித சீட்டு பணமும் நடத்தி இருப்பது கிடையாது என்றாலும் நான் இந்த எதிரிகளிடம் ஒரு போதும் சீட்டு பணம் செலுத்தி இருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. கோவிலை நிர்வாகம் செய்தது சம்பந்தமாக மகேஷ் மாயவனுக்கும், 1வது எதிரிக்கும் பிரச்சினை இருந்து வருவதால் எதிரிகளை பழி வாங்க வேண்டும் என்பதற்காக மகேஷ் மாயவன் தூண்டுதலின் பேரில் கொடுக்கபட்ட பொய் புகாருக்கு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் எதிரிகளிடம் சீட்டு பணம் செலுத்தியதாகவும் அவர்கள் அந்த பணத்தை வரவு வைத்ததாகவும் அதை எரித்து விட்டதாகவும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

புகார் கொடுக்கும் போது யாரெல்லாம் உடன் வந்தார்கள் என்றால்

தெய்வக்கனி வந்தார். மற்றவர்கள் பெயர் தெரியவில்லை. போலிசார் எங்களை மொத்தமாக தான் விசாரித்தார்கள். எதிரிகள் 7 பிரிவுகளாக சீட்டு நடத்தினார்கள். எத்தனை லட்ச ரூபாய் சீட்டு நடத்தினார்கள் என்று தெரியாது. 7 பிரிவு எவ்வுளவு தொகை என்று எனக்கு தெரியாது. 7 பிரிவாக சீட்டு நடத்துவதாக எனக்கு விவரம் யார் சொன்னார் என்றால் எப்போதுமே 7 பிரிவாக தான் நடத்துவார்கள். இந்த சீட்டிற்கு முன்பு சீட்டு போட்டுள்ளேனா என்றால் என் கணவர் சீட்டு போட்டு எடுத்து விட்டோம். எவ்வுளவு ரூபாய் சீட்டு என்றால் ஞாபகம் இல்லை. அந்த பணத்தை தந்து விட்டார்கள். போலிஸ் விசாரணையில் ஏற்கனவே சீட்டு போட்ட விவரத்தை சொன்னேன் என்றால் சரிதான். ரூ.60000 சீட்டு மொத்தம் எத்தனை வாரம் கட்ட வேண்டும் என்றால் தெரியாது. ஒவ்வொரு வாரமும் ரூ.500 கட்டுவேன். மொத்தம் 38 வாரங்கள் கட்டி இருந்தேன். மொத்தம் ரூ.11,740 கட்டி இருந்தேன்.

மொத்தம் இவ்வுளவு தொகை கட்டியதாக எனக்கு யார் சொன்னார் என்றால் என் பிள்ளைகள் நோட்டில் எழுதி வைத்துள்ளார்கள். போலிஸ் விசாரிக்கும் போது நோட்டை காண்பிக்கவில்லை. வாய்மொழியாக தான் சொன்னேன். நான் ஏலத்தில் கலந்து கொள்ள மாட்டேன். யார் யாரெல்லாம் சீட்டு போட்டுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். வாரா வாரம் கழிவு தொகையை தந்து விடுவார்கள். இரண்டாவது சீட்டு மாயவன் கோவிலுக்கு என்றால் சரிதான். கோவிலிலிருந்து சீட்டு நடத்துவதால் கோவிலுக்கு எடுத்து கொள்வார்கள் என்றால் சரிதான். சீட்டு எடுத்தவர்கள் கழிவு இல்லாமல் முழு தொகையும் கட்ட வேண்டும் என்றால் சரிதான். சீட்டு நின்று போவதற்கு முன்பு சீட்டு எடுத்தவர்கள் பணத்தை கட்டவில்லை என்றால் சரிதான். ஏலம் கேட்பவர்களுக்கு கழிவு தொகை போக மீதி தொகையை கொடுத்து விடுவார்கள் நான் கட்டியுள்ள வாரம் வரை தான் மற்றவர்களும் கட்டி உள்ளார்கள் என்றால் தெரியாது. நான் சீட்டு போடவில்லை என்றால் சரியல்ல. சீட்டு போட்டிருந்தால் மேற்படி விவரம் தெரிந்திருக்கும் என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்வது போல் இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும் எதிரியோ, அவருக்கு வேண்டபட்டவர் யாரோ தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தபடவில்லை என்றால் சரியல்ல.
(1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது).

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }

Miscellaneous } Case No : - CC// 563/2024

: Prosecution P.W - 51

NAME : ஐயப்பன்

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 28.10.2025

முதல் விசாரணை

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் ஊர்க்காரர்கள். ஆஜர் எதிரிகளிடம் நான் சீட்டு போட்டிருந்தேன். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும். அசா.2 அந்தோணிராஜ் அசா.3 டேவிட் அமல்ராஜ் தெரியும். அசா.4 செல்வராஜ் அசா.5 ஜோசப்ராஜ் தெரியும், அசா.6 அருமைகிளி . அசா.7 பாலமுருகன் . அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி ஆகியோரை தெரியும். அசா.12 பொன்பாண்டி தெரியாது அசா.13 சாந்தி தெரியாது அசா.14 குணசீலன் தெரியாது, அசா.15 முத்துலெட்சுமி தெரியாது, அசா.16 செல்வகுமாரி ஆகியோர்களை தெரியாது அசா.17 முருகன் அசா.18 ராமர் மனைவி சரோஜா ஆகியோர்களை தெரியாது அசா.19 குமரேசன் தெரியும் அசா.20 மணிராஜ் தெரியாது அசா.21 பொன் சேகர் தெரியாது . அசா.22 சுதா தெரியாது, அசா.23 ரவிகுமார் தெரியாது அசா.24 ஜெயஜோதி தெரியாது, அசா.25 ஜானகி ஆகியோரை தெரியாது. அசா.26 பவளக்கொடி தெரியாது, அசா.27 தெய்வகனி தெரியும், அசா.28 செல்வன் தெரியாது, அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியும். அசா.30 அருள்ஜெலஸ்டீன் தெரியாது, அசா.31 அன்னபூரணி தெரியாது, அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் தெரியும் அசா.33 முத்துக்கனியை தெரியாது , அசா.34 வசுமதி தெரியாது, அசா.35 இருளப்பன் தெரியாது, அசா.36

முருகன் தெரியாது, அசா.37 கெலின் ஞானபிரகாசம் தெரியாது, அசா.38 மரியசுந்தரி ஆகியோர்களை தெரியாது அசா.39 தேன் மொழி அசா.40 புஷ்பவள்ளி அசா.41 விஜய், அசா.42 சரோஜா ஆகியோரை தெரியாது. அசா.43 பாலமுருகன் அசா.44 காளீஸ்வரி ஆகியோர்களை தெரியாது. அசா.45 கனகமணி, அசா.46 சகுந்தலா தெரியாது, அசா.47 ஞானப்பிரகாசம் தெரியாது ,. அ.சா.48 சேர்மக்கனியை தெரியாது, அ.சா.49 மூக்கம்மாள் தெரியும், அசா.50 முருகன் தெரியாது. ஆஜர் எதிரிகள் 2010ம் வருடத்திலிருந்து சீட்டு பிரித்தார்கள். எத்தனை குழுக்களாக பிரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை, நான் ரூ.30000 சீட்டில் 2 சீட்டுகளும், ரூ.62000 சீட்டில் ஒரு சீட்டும் சேர்ந்திருந்தேன். எவ்வுளவு சீட்டு பணம் கட்டிருந்தேன் என்று நினைவில் இல்லை. மாயவன் கோவிலில் வைத்து ஞாயிற்றுக்கிழமை தோறும் இரவு 7மணிக்கு சீட்டு பணத்தை செலுத்துவேன். சீட்டு பணத்தை நான் கொடுக்கும் போது அதை நோட்டில் வரவு வைத்து கொள்வார்கள். சீட்டு பணத்தை நான் நம்பிக்கையாக அவரிடம் கொடுத்திருந்தேன். முதலில் நான் போட்டிருந்த ரூ.50000 சீட்டு பணத்தை எதிரிகள் கொண்டு வந்து கொடுத்தார்கள். அதன் பேரில் நான் நம்பிக்கையில் இரண்டாவதாக சீட்டு போட்டிருந்தேன். பின்னர் சிறிது நாட்கள் கழித்து சீட்டு பணம் நடத்தவில்லை என தெரிந்தது. பின்னர் சத்தம் போட்டு கிடந்தார்கள். நடவடிக்கை எடுக்க புகார் யார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. தற்போது வரை நான் கட்டிய சீட்டு பணம் எனக்கு தரவில்லை. நான் சிறுக சிறுக சேர்க்கவும் நம்பிக்கையின் பேரில் எதிரிகளிடம் சீட்டு போட்டிருந்தேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இதற்கு முன்பு ரூ.50000 சீட்டு போட்டதாக போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. அந்த ரூ.50000 சீட்டு எத்தனை ஆண்டுகள் கட்டினேன் என்றால் 2 ஆண்டுகள் கட்டினேன். அந்த சீட்டில் எத்தனை உறுப்பினர் இருந்தோம் என்றால் தெரியாது. அதற்கு சீட்டு பணம் ஒவ்வொரு தடவையும் ரூ.500 கட்டுவோம். எனக்கு கடைசி சீட்டு பணத்தை தந்தார்கள். நான் அந்த கோவிலில் வரிதாரரா என்றால் இல்லை. அந்த கோவிலில் வைத்து எத்தனை ஆண்டுகளாக சீட்டு நடத்தப்பட்டு வருகிறது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. ரூ.30000 சீட்டில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. ரூ.62,000 சீட்டில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. வாத்தியார் என்று கூப்பிட்டு பழக்கம். ஒருவர் வாத்தியார். மற்றொரு பெயர் என்னவென்றால் துரை, ரூ.30000 சீட்டு எத்தனை சீட்டுகள் செலுத்தினேன் என்று எனக்கு தெரியாது. ரூ.62000 சீட்டில் எத்தனை சீட்டுகள் செலுத்தினேன் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை எப்போது விசாரித்தார் என்றால் ஒருவர் புகார் கொடுத்த போது விசாரித்தார்கள். என்னை கோவில் பக்கத்தில் வைத்து காலையில் விசாரித்தார்கள்.

என்னை விசாரிக்கும் போது சுமார் எத்தனை பேர் இருந்திருப்பார்கள் என்றால் 20 ஆட்களுக்குமேல் இருந்திருப்பார்கள். ரூ.30000 மற்றும் ரூ.62000

சீட்டில் ஒவ்வொரு சீட்டிற்கும் எத்தனை நாள் எவ்வுளவு தொகை செலுத்தினேன் என்று எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை, வாய்மொழியாக தான் சொன்னேன். என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றது ஆண் போலிஸா, பெண் போலிஸா என்றால் ஆண் போலிஸ். அந்த கோவிலை யார் நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்றால் தெரியாது. அந்த கோவிலின் நிர்வாகம் சம்பந்தமாக இரு தரப்பினருக்கு பிரச்சினை உள்ளது என்றால் தெரியாது. மாயவன் கோவில் எந்த திசை பார்த்து உள்ளது என்றால் கிழக்கு பார்த்து உள்ளது. இடையில் சீட்டு பிரிக்காமல் இருந்ததாக சொல்லியது சம்பந்தமாக யாராவது புகார் கொடுத்தார்களா என்றால் தெரியாது. நான் பணம் கொடுக்கும் போது நோட்டில் வரவு வைப்பதாக யார் சொன்னார் என்றால் நான் பார்த்தேன். நான் கொடுக்கும் பணத்தை எதிரிகள் வரவு வைப்பார்கள் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியில் ஒருவரான வாத்தியார் எந்த பள்ளியில் வேலை பார்த்தார் என்றால் தெரியாது. புகார் கொடுப்பதற்கு நான் காவல்நிலையம் செல்லவில்லை. அதனால் புகாரில் என்ன விவரம் சொல்லபட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சம்மன் வந்த பின்பு தான் தெரியும். எவ்வாறு எனக்கு முதல் விசாரணையில் சொன்ன விவரம் யார் சொல்லி கொடுத்தார் என்றால் யாரும் சொல்லி கொடுக்கவில்லை.

நான் சொல்வது போல் எதிரிகள் எந்த வித சீட்டும் ஒரு போதும் நடத்தி இருப்பது கிடையாது என்றாலும் நான் சீட்டு பணம் அவர்களிடத்தில் செலுத்தி இருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. மாயவன் கோவில் வெய்க்காலிபட்டியில் தான் உள்ளதா என்றால் ஆமாம். எனக்கு ஒன்றிய செயலாளர் மகேஷ் மாயவனை தெரியும். அவரும்இந்த கோவிலின் நிர்வாகஸ்தர் என்றால் சரிதான். அவருக்கும், எதிரிகளுக்கும் நிர்வாகம் சம்பந்தமாக பிரச்சினை உள்ளது என்றால் தெரியாது. மகேஷ் மாயவனின் தூண்டுதலின் பேரில் எதிரிகள் மீது கொடுக்கப்பட்ட பொய் புகாரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ரூ.30000 சீட்டிற்கு வாரம் ரூ.300 கட்ட வேண்டும். ரூ.30000 சீட்டு எப்போது ஆரம்பித்தது என்றால் ஞாபகம் இல்லை. மொத்தம் எத்தனை வாரங்கள் கட்ட வேண்டும் என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் தெரியாது. ரூ.62000 சீட்டிற்கு வாரம் ரூ.500 கட்ட வேண்டும். ஒவ்வொரு சீட்டிற்கும் கழிவு உண்டு என்றால் சரிதான். ஒவ்வொரு சீட்டிலும் இரண்டாவது சீட்டு மாயவன் கோவிலுக்கு என்றால் சரிதான். நான் ஏலத்தில் கலந்து கொண்டேனா என்றால் நான் எப்போதும் ஏலம் கேட்க மாட்டேன். மொத்தம் எவ்வுளவு தொகை கட்டி உள்ளேன் என எனக்கு தெரியாது. போலிஸ் விசாரணையிலும் எவ்வுளவு கட்டினேன் என நான் சொல்லவில்லை. ஏலக்கழிவு தொகையை உடனே கையில் கொடுத்து விடுவார்கள். ஏலம் எடுப்பவர்களுக்கு உடனடியாக கோவிலில் வைத்து பணத்தை கொடுத்து விடுவார்கள் என்றால் சரிதான். ரூ.30000 சீட்டில் அதிகபட்சம் எவ்வுளவு ஏலம் போயிருக்கும் என்றால் ஞாபகம்

இல்லை. நான் சீட்டு போடவில்லை என்றாலும் சீட்டு போட்டிருந்தால் எவ்வுளவு தொகை செலுத்தி உள்ளேன் என எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும் சரியல்ல. நான் சீட்டு போட்டிருந்தேன். நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்வது போல் இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும் எதிரியோ, அவருக்கு வேண்டபட்டவர் யாரோ தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தபடவில்லை என்றால் சரியல்ல.
(1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது).

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi